# பத்திரிக்கை செய்தி

## தற்காலிக மின் இணைப்பு வழங்க ரூ.5,000/- லஞ்சம் கேட்டு பெற்ற மின் வாரிய போர்மேன் கைது

புகார்தாரர் திரு.வரதன், எடப்பாளையம் கிராமம், திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய வீட்டிற்கு தற்காலிக மின் இணைப்பு வேண்டி திருவண்ணாமலை கிழக்கு மின் பகிர்மான மற்றும் மின் இணைப்பு கழகம் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து தற்காலிக மின் இணைப்பு வழங்குவதற்கு திரு.ரேணு, போர்மேன் திருவண்ணாமலை கிழக்கு மின் பகிர்மான மற்றும் மின் இணைப்பு கழகம், திருவண்ணாமலை அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.5,000/- கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திரு. வரதன், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை திருவண்ணாமலை பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 20.02.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.ரேணு, போர்மேன், லஞ்ச பணமான ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## EB FOREMAN ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.5,000/- FOR TEMPORARY EB CONNECTION

The complainant Tr.Varadhan, residing at Edappalayam Village, Tiruvannamalai District. Complainant had applied for temporary EB connection for his house at East TANGEDCO office, Tiruvannamalai. Tr.Renu, Foreman, TANGEDCO East, Tiruvannamalai District demanded Rs.5,000/- as bribe for issuing temporary EB connection. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruvannamalai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (20.02.2023), during the trap Tr. Renu, Foreman, reiterated his demand and received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was arrested.

.